**26 மாபாதகம் தீர்த்த படலம்**

குலோதுங்கன் ஆட்சி புரிந்தகாலத்தில் அவந்தி என்னும்நகரில்ஓர் அந்தணன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒழுக்கம் கெட்ட மகன் இருந்தான். அவன் செய்யாத குற்றம் ஒன்றும் இல்லை. அவன் தன் தந்தையின் எதிரிலேயே தாயுடன் கூடி பின்னர் ஓர் நாள் தந்தையையும் கொன்றான். தந்தையை தகனம் செய்துவிட்டு, தாயுடன் தன்னால் சுமக்கக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு நீண்ட பயணம் தொடங்கினான்.

வழியில் வேடர்கள் அவனது பொருட்களையும் தாயையும் கவர்ந்துச் சென்றனர். அவன் செய்த பாப செயல்களால் மாபாதகம் அவனைப் பற்றிக் கொண்டது. படாதப் பாடுப் பட்டபின், பாவம் தீரும் நாள் வந்ததும், சிவனாரின் அருளால் மதுரை மாநகரைஅடைந்தான்.

அப்பொது அம்மையும் அப்பனும் வேட்டுவச்சியாகவும், வேடனாகவும் திருவுருவம் கொண்டு, வாதாடிக்கொண்டிருந்தனர். பெருமான் அம்மையிடம், அம்மாபாதகனைக் காட்டி, காமம், மனிதனின் பண்பாட்டை சீர்குலைத்து, கொலை, கொள்ளைகளைச் செய்யத் தூண்டி, முடிவில் நரகத்திற்கே கொண்டு செல்லும் என்றார்.

பின் சிவவேடுவர் அப்பாதகனிடம் அவன் துன்பத்திற்கான காரணம் கேட்டார். அவனும் தன் தந்தையை கொன்றது வரை தான் செய்த எண்ணற்ற பாப செயல்களைக் கூறி அழுதான்.

அவன் மீது இரக்கம் கொண்ட ஐயன் பாபம் நீங்கும் வழிகளையும் கூறியருளினார்.

பிச்சை எடுத்து ஒரு பொழுது உண்ணுதல், சிவனடியார்களுக்கு தொண்டு புரிந்தல், சூரியன்உதிக்கும் முன் எழுந்து கோயில் குளத்தில் நீராடி, அருகம்புல் பறித்து பசுவிற்கு கொடுத்தல், சிவபெருமானை நூற்றெட்டு முறை வலம் வருதல் போன்ற தவ நெறிகளை கடைப்பிடித்தால்கொலை பாதகம் நீங்கும் என்று கூறியருளினார்.

இதனைக்கேட்டவேட்டுவச்சி, இக் கொடியவன் செய்த பாவத்திற்கு உய்யும் வழியே இல்லாத சமயம், ஐயன் இவனுக்கு அருளிய காரணம் யாது என வேடுவனிடம் வினவினாள். கொலைக்கும் பழிக்கும் அஞ்சாத எவன் தன் பாவம் நீங்கும் வழி தெரியாமல் தம்மை சரண்டையும் சமயம் அவர்களை காப்பதே தம் கடமையாகும் என்று உமையவளுக்கு ஐயன் உணர்த்தி பின் இருவரும் மறைந்தனர்.

மாபாதகன் வியந்து, அவர்கள் கூறிய தவநெறியை மேற்கொண்டு, மூன்று மாதத்திலேயே பாபம் நீங்கி, ஐயன்மீது பாமாலைகள பாடி, அவரது பாதாரவிந்தம் அடைந்தான்.

### பல்லவி

தாயிடம் கூடி பின் தந்தையைக் கொன்றவன்
மாபாதகம் தீர்க்க எண்ணம் கொண்டனை

### அனுபல்லவி

நாயின் காவலுடன் அம்மையோடு வேடுவனாய்
நல்லுபதேசம் செய்து கடைத் தேறச் சொன்னீர்

### சரணம்

ஒரு பகல் பிச்சையுண்டு சிவனடிக்கு தொண்டு செய்து
அனுதினம் நூற்றெட்டு அங்கப்பிரதக்ஷிணம் செய்து
திருக்கோயில் புறத்தொட்டியில் தினமும் நீராடிய பின்
அருகம்பில் ஆவினுக் கீந்து பழி தீர்ந்திடச் சொன்னீர்